## <u>திருவேற்காடு நகராட்சி</u>
## <u>நகர்மன்ற சாதாரணக் கூட்டம்</u>

**2019ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் நாள் வியாழன்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 31.10.2019**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

### <u>பொருள் எண். 1</u>

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.887** **நாள்.31.10.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

### <u>பொருள் எண். 2</u>

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான அக்டோபர் 2019 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–_** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.888** **நாள்.31.10.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

### <u>பொருள் எண். 3</u>

இந்நகராட்சியில் அக்டோபர் 2019ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.889** **நாள்.31.10.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

### <u>பொருள் எண்.4</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை ஒரு வருட காலத்திற்கு சீர்செய்து பராமரிக்கும் பணியினை ரூ.15.00 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ள இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.673, நாள்.31.01.2019–ன்படி நிர்வாக அனுமதி அளித்ததை தொடர்ந்து, இப்பணியினை மேற்கொள்ள 01.03.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.G.விஜயகுமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.754, நாள்.07.03.2019–ன்படி ஏற்றுக்கொண்டதையடுத்து மேற்படி ஒப்பந்ததாரருக்கு மார்ச் 2019 முதல் பிப்ரவரி 2020 வரையிலான காலத்தில் பணியினை மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, மேற்படி ஒப்பந்தாரர் மூலம் மார்ச் முதல் ஆகஸ்ட் 2019 வரையிலான காலத்தில் பணி மேற்கொண்ட வகையில் ரூ.9,73,510/– செலவிடப்பட்டுள்ளது. தற்போது கடந்த கோடை காலத்தில் மேற்படி ஆழ்துளை குழாய் கிணறுகளில் மின்மோட்டார்களில் அதிக அளவில் பழுதுகள் ஏற்பட்டதையடுத்து பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி பழுதுகள் உடனுக்குடன் சீர்செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் பிப்ரவரி 2020 வரை பணியினை தொடர்ந்து மேற்கொள்ள

வேண்டியுள்ளதால் கூடுதல் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) குடிநீர் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி கூடுதல் செலவினத்தினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.890 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 5

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் தெருக்குழாய்களில் ஏற்படும் பழுதுகளை ஒருவருட காலத்திற்கு பழுதுபார்த்திட ரூ.20.00 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ள இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.672, நாள்.31.01.2019–ன்படி நிர்வாக அனுமதி அளித்ததை தொடர்ந்து, இப்பணியினை மேற்கொள்ள 01.03.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.குமரேசன் கான்டராக்டர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.754, நாள்.07.03.2019–ன்படி ஏற்றுக்கொண்டதையடுத்து மேற்படி ஒப்பந்ததாரருக்கு மார்ச் 2019 முதல் பிப்ரவரி 2020 வரையிலான காலத்தில் பணியினை மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது நகராட்சி பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு 9000 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணி துவங்கியுள்ள நிலையிலும், பருவமழை காலங்களில் மழைநீர் தெருக்களில் வெளியேற ஏதுவாக ஆங்காங்கே மண் கால்வாய்கள் அமைக்கும்போது பெருமளவில் குடிநீர் குழாய்களில் உடைப்புகள் ஏற்பட்டதையடுத்து பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி பழுதுகள் உடனுக்குடன் சீர்செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படுகிறது. எனவே, மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் பிப்ரவரி 2020 வரை பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கூடுதல் செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) குடிநீர் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி கூடுதல் செலவினத்தினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.891 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.6

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சென்னை பெருநகர வளர்ச்சி குழும திறந்தவெளி கட்டண நிதியின் கீழ் பூங்கா அபிவிருத்தி பணிகள் மற்றும் பொது நிதியின் கீழ் அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு கடிதத்தினை அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை மூலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்குண்டான பட்டியல் **M/s.Mark Media Communications,** No.13, Moores Road, Moores Garden, Thousand Light, Chennai-600006. என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | **M/s.Mark Media Communications,** No.13, Moores Road, Moores Garden, Thousand Light, Chennai-600006 | சென்னை பெருநகர வளர்ச்சி குழும திறந்தவெளி கட்டண நிதியின் கீழ் பூங்கா அபிவிருத்தி பணிகள் மற்றும் பொது நிதியின் கீழ் அடிப்படை வசதி பணிகள் | 716<br>16.10.2019 | 1,57,500.00 |
| | | | **மொத்தம்** | **1,57,500.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.892 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 7

மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் ந.க.எண்.166/செமதொஅ/2019, நாள். .07.2018–ன் கடிதத்தின்படி தினசெய்தி தினசரி நாளிதழில் தமிழகம் அடைந்துள்ள வளர்ச்சி பற்றிய விபரங்கள் குறித்த தொழில் மலர் 2019 வெளியிடவுள்ளதாகவும் அத்தொழில் சிறப்பு மலரில் நகராட்சியின் சார்பாக மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் குறித்து விளம்பரம் வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டப்பணிகள் குறித்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு மேற்படி கீழ் குறிப்பிட்டுள்ள பத்திரிகை நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

மேலும், மேற்படி பணியின் அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம். மேலும், மேற்படி செலவினத்திற்கான தொகையினை பொது நிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | M/s.Dina Cheithi, No.22, First Cross Street, 2nd Avenue, Ashok Nagar, Chennai- 600083. | தமிழகம் அடைந்துள்ள வளர்ச்சி பற்றிய விபரங்கள் குறித்த தொழில் மலர் 2019 வெளியிடுதல். | 858 27.10.2019 | 9,450/– |
| | | | மொத்தம் | 9,450/– |

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.893 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 8

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கோலடி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பசுமை உரக்குடில் கட்டிடத்தில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.894 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

---

## பொருள் எண். 9

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பருவமழை காலத்தில் குடியிருப்பு பகுதிகளில் தேங்கும் மழைநீரினை சாலையோரம் மண் கால்வாய்கள் அமைத்து வெளியேற்ற வேண்டியுள்ளது. அவ்வாறு சாலையோரம் மண்கால்வாய்கள் அமைக்கப்படும் போது சாலை சந்திப்புகளிலும், மழைநீர் வெளியேற ஏதுவாகவும் போக்குவரத்திற்கு இடையூறுயின்றி ஆர்.சி.சி குழாய்கள் அமைக்கவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.895** **நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

---

## பொருள் எண். 10

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2019–2020ன் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 22.10.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின் போது தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரிரை JCB இயந்திரத்தினை வாடகை அடிப்படையில் அமர்த்தி பணி செய்தல் மற்றும் தேவையான மணல் மூட்டைகள் தயார் செய்தல். | 8.00 | N.செல்வராஜ்<br><br>M/s.MSM எண்டர்பிரைஸஸ் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>3.82 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | நகராட்சி பகுதிகளில் தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை வெளியேற்ற தேவையான நீர் மூழ்கி மின்மோட்டார்கள், வெளியேற்று குழாய்கள், PVC பைப்புகள் மற்றும் கேபிள் சப்ளை செய்தல். | 7.00 | M/s.MSM எண்டர்பிரைஸஸ்<br><br>R.நிம்ரோட் | 0.29 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>2.21 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | நகராட்சி சொந்தமான மோட்டார்களை பயன்படுத்தி மழைநீர் வெளியேற்ற தேவையான ஆட்களை சப்ளை செய்தல். | 5.00 | G.விஜயகுமார்<br><br>M/s.குமரேசன் கான்ட்ராக்டர் | 0.77% மதிப்பீட்டை விட குறைவு<br><br>1.37% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | நகராட்சி பகுதிகளில் மழைக்காலங்களில் தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை வாடகை அடிப்படையில் அதிக திறன் கொண்ட டீசல் மோட்டார்கள் பொருத்தி மழைநீரினை வெளியேற்றுதல். | 9.50 | G.விஜயகுமார்<br><br>M/s.குமரேசன் கான்ட்ராக்டர் | 0.34 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>3.09 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | திருவேற்காடு நகராட்சியில் 12 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் 49 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளுக்கு தேவையான திரவ குளோரினேசன் சப்ளை செய்தல். | 9.60 | M/s.KLEIN INCORPORATION<br><br>M/s.ANICHAM ASSOCIATES | 0.71 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>2.84 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | திருவேற்காடு நகராட்சியில் பொது மக்களுக்கு மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு விளம்பரம் மேற்கொள்ள தேவையான மாதிரி வடிவமைத்தல் பணி மேற்கொள்ளுதல். | 2.50 | M/s. M/s.Simla Cool Makers<br><br>M/s.Big Fox Engineering | 0.80 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>4.00 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | விசாக் அவென்யூ, புளியம்பேடு பாலாஜி நகர், நூம்பல் பெருமாள் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 7.00 | G.விஜயகுமார்<br>M/s.குமரேசன் காண்ட்ராக்டர் | 0.48 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.07 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 8. | நூம்பல் சொக்கலிங்கம் நகர் மற்றும் ராஜாஸ் கார்டன் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.70 | G.விஜயகுமார்<br>M/s.குமரேசன் காண்ட்ராக்டர் | 0.49 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.07 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.896 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 11

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2019–2020ன் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 25.10.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.1 முதல் 6 வரையுள்ள சாலைகளில் மழைக்காலங்களில் ஏற்படும் பழுதுகளை செப்பனிடும் பணி செய்தல். | 9.90 | M/s.திருமலை கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>M.கார்த்திக் | 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.09 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.7 முதல் 12 வரையுள்ள சாலைகளில் மழைக்காலங்களில் ஏற்படும் பழுதுகளை செப்பனிடும் பணி செய்தல். | 9.90 | M/s.திருமலை கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>M.கார்த்திக் | 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.09 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.13 முதல் 18 வரையுள்ள சாலைகளில் மழைக்காலங்களில் ஏற்படும் பழுதுகளை செப்பனிடும் பணி செய்தல். | 9.90 | M/s.திருமலை கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>M.கார்த்திக் | 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.09 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.897 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 12

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2019–2020ன் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 30.10.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 3 | கேலக்ஸி தெரு மற்றும் வெள்ளாளர் தெரு பகுதியில் 7மீ உயரமுள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 10.00 | M/s.அவிக்னா எண்டர்பிரைசஸ்<br>M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ் | 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.63 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 5 | மெட்ரோ சிட்டி அனுகு சாலை பகுதியில் 7மீ உயரமுள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 10.00 | M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ்<br>M/s.அவிக்னா எண்டர்பிரைசஸ் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.42 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | 5 | மெட்ரோ சிட்டி 2வது தெருவிற்கு 7மீ உயரமுள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 10.00 | M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ்<br>M/s.அவிக்னா எண்டர்பிரைசஸ் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.42 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | 8 | ராஜேஸ் கார்டன் பகுதியில் 7மீ உயரமுள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 5.00 | M/s.அவிக்னா எண்டர்பிரைசஸ்<br>M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ் | 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.62 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | 9 | பாலாஜி நகர், அசோக் நந்தவனம் மற்றும் ஐ.சி.எல் காலனி பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தல். | 6.50 | G.விஜயகுமார்<br>M/s.S.V.சுவாமி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.18 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.02 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | 9 | ஐ.சி.எல் காலனி மற்றும் மகாலட்சுமி நகர் பகுதியில் குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்தல். | 5.40 | G.விஜயகுமார்<br>M/s.S.V.சுவாமி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.34 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.81 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 7. | 14 | திருவேற்காடு பள்ளிக் கூட சாலை குறுக்கு தெருவிற்கு பேவர் பிளாக் வசதி செய்தல். | 1.60 | J.இளங்கோ<br>J.வெங்கடேசன் | 0.17 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.39 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 8. | 14 | கோவிந்தராஜ் நகர் 1வது தெரு மற்றும் கற்பகாம்பாள் நகர் மயான சாலை தார்தளம் அமைத்தல். | 7.80 | R.கதிர்வேல்<br>U.R.சுப்பிரமணியம் | 0.03 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.27 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 9. | 15 | அன்னை அபிராமி நகர் 5வது தெரு, சிவன் கோயில் குறுக்கு தெரு மற்றும் ASK நகர் குறுக்கு தெருக்களுக்கு பேவர் பிளாக் வசதி மேற்கொள்ளுதல். | 7.50 | R.கதிர்வேல்<br>U.R.சுப்பிரமணியம் | 0.13 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.04 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | 17 | சுந்தரசோழபுரம் ஏரிக்கரை தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல். | 8.50 | S.நித்தியானந்தம்<br><br>P.சந்திரன் | 0.17 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.11 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 11. | – | நகராட்சி அலுவலகத்திற்கு புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல். | 5.50 | J.வெங்கடேசன்<br><br>J.இளங்கோ | 0.31 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.25 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.898 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 13

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சென்னை பெருநகர வளர்ச்சி குழும திறந்தவெளி ஒதுக்கீடு கட்டண நிதி மற்றும் பொது நிதி 2019–2020ன் கீழ் கீழ்க்கண்ட பூங்கா மேம்பாட்டு பணிகள் மற்றும் அப்படை வசதிப்பணிகளை மேற்கொள்ள 31.10.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| | **சென்னை பெருநகர வளர்ச்சி குழும திறந்தவெளி ஒதுக்கீடு கட்டண நிதி 2019–20** | | | | |
| 1. | 5 | அயனம்பாக்கம் மில்லினியம் டவுன் பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல் (சர்வே எண்.88/2, அயனம்பாக்கம் கிராமம்) | 41.00 | KS.ஜனார்த்தனம்<br><br>J.வெங்கடேசன் | 4.88 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>6.22 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 5 | அயனம்பாக்கம் மெட்ரோ சிட்டி பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல் (சர்வே எண்198/PT, அயனம்பாக்கம் கிராமம்) | 43.00 | M/s.MSM எண்டர்பிரைஸஸ்<br><br>V.பார்த்திபன் | 4.89 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>6.03 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | 5 | அயனம்பாக்கம் மெட்ரோ சிட்டி பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல் (சர்வே எண்148/2, அயனம்பாக்கம் கிராமம்) | 33.00 | M/s.MSM எண்டர்பிரைஸஸ்<br><br>R.நிம்ரோட் | 4.59 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>8.67 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | 6 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் 3வது பிரதான சாலையில் உள்ள பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல். | 33.00 | M/s.S.V.சுவாமி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br><br>M/s.RMS கன்ஸ்ட்ரக்ஸன் | 4.92 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>6.32 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | 6 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் தேவதாஸ் தெருவில் உள்ள பூங்காவிற்கு விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல். | 24.00 | KS.ஜனார்த்தனம்<br><br>J.வெங்கடேசன் | 4.97 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>5.71 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | 8 | ஜட்ஜஸ் காலனி பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல். (சர்வே எண்.122/1, நூம்பல் கிராமம்) | 35.00 | M/s.VV சிவில் ஒர்க்ஸ்<br><br>M/s.S.V.சுவாமி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.87 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>6.50 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 7. | 8 | சுசையா நகர் பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல். | 18.00 | M/s.Vivek Construction<br><br>M/s.SP Builders | – |
| 8. | 9 | மூகாம்பிகை நகர் பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல். (சர்வே எண்.132/1எப், நூம்பல் கிராமம்) | 42.00 | V.பார்த்திபன்<br><br>M.கார்த்திக் | 4.99 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>6.45 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 9. | 11 | கோ–ஆப்ரேடிவ் நகர் மகாத்மா காந்தி தெருவில் உள்ள பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல். | 38.00 | S.நித்தியானந்தம்<br><br>P.சந்திரன் | 4.93 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>6.18 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 10. | 11 | கோ–ஆப்ரேடிவ் நகர் பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல். (சர்வே எண்.31/12, நூம்பல் கிராமம்) | 23.00 | M/s.RR பில்டர்ஸ்<br><br>P.ரகு | 4.98 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>6.03 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 11. | 16 | காயத்திரி நகர் பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல். (சர்வே எண்.37/1, 37/2 (ம) 33/3, வீராகவபுரம் கிராமம்) | 32.00 | M/s.RMS கன்ஸ்ட்ரக்ஸன்<br><br>M/s.S.V.சுவாமி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.86 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>6.74 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 12. | 17 | ராம் நகர் பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல். (சர்வே எண்.32/5Á, சுந்தரசோழபுரம் கிராமம்) | 38.00 | M/s.MSM எண்டர்பிரைஸஸ்<br><br>V.பார்த்திபன் | 4.72 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>6.02 % மதிப்பீட்டை விட அதிகம் |
| | **பொது நிதி 2019–20** | | | | |
| 13. | 12 | பல்லவன் நகர் 2வது பிரதான சாலை மற்றும் 7வது தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 30.00 | V.பார்த்திபன்<br><br>P.ரகு | 4.95 % மதிப்பீட்டை விட அதிகம்<br>7.62 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 14. | 11 | பத்மாவதி நகர், 1வது தெரு மற்றும் 1வது குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 14.50 | N.செல்வராஜ்<br><br>V.பார்த்திபன் | 4.91 % மதிப்பீட்டை விட அதிகம்<br>6.21 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **15.** | 14 | பாலாம்பிகை நகர், அன்னை அபிராமி நகர், கனகதுர்கா நகர், சக்தி நகர் மற்றும் சுப்பிரமணியபுரம் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | **48.00** | KS.ஜனார்த்தனம்<br><br>J.இளங்கோ | **4.90** % மதிப்பீட்டை விட அதிகம்<br>**9.02** % மதிப்பீட்டை விட அதிகம் |
| **16.** | 16 | காடுவெட்டி மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள பகுதியினை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல். | **28.00** | M.A.மேத்யூ<br><br>M/s.Mars Construction | **4.85** % மதிப்பீட்டை விட அதிகம்<br>**9.57** % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மேற்படி பணிகளில் வரிசை எண்.7 நீங்களாக ஏனைய பணிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத்தினை மேற்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழும திறந்தவெளி ஒதுக்கீடு கட்டண நிதி மற்றும் பொது நிதியின் கீழ் ஈடு செய்யவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** வரிசை எண்.7ல் உள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் முன்வைப்பு தொகை முறையாக செலுத்தாத காரணத்தினால் இப்பணிக்கு மட்டும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.899** **நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 14

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சி 18 வார்டுகளை கொண்டதாகும். இந்நகராட்சி மொத்த பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் ஆகும். மேலும் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 62289 ஆகும். தற்போது மக்கள் தொகை சுமாராக 89164 ஆகும். நகராட்சி பகுதியில் நாள் ஒன்றுக்கு 22.89 மெட்ரிக் டன் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத தன்மை என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. மேலும் மாவட்ட ஆட்சி தலைவர், திருவள்ளூர் மாவட்டம், இணை இயக்குநர் பொது சுகாதாரம், திருவள்ளூர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் ஆகியோரின் டெங்கு ஒழிப்பு ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி நகராட்சி பகுதி முழுவதும் டெங்கு நோய் ஒழிப்பு களப்பணி மேற்கொள்ள, தெரிவிக்கப்பட்டதில் நகராட்சியில் தற்போது **விடிவெள்ளி ரூரல் டவலப்மெண்ட் டிரஸ்ட்** என்ற நிறுவனத்தின் மூலம் 75 (DBC) பணியாளர்கள் சப்ளை செய்ய உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றுவரப்படுகிறது. மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் 31.10.2019 உடன் முடிவடைவதால் புதிதாக ஒப்பந்தபுள்ளி கோரும் நடைமுறைகள் காலதாமதம் ஆகும் என்பதாலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதியும் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதின் அடிப்படையில் நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி ஆக மூன்று மாத காலத்திற்கு மேற்படி நிறுவனத்திற்கு 75 (DBC) பணியாளர்கள் சப்ளை செய்ய பணி நீட்டிப்பு செய்யவும், மேற்படி நிறுவனத்திற்கு அதே ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒப்படைப்பு செய்யவும், பணி உத்திரவு வழங்கவும் இதற்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.900** **நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 15

திருவேற்காடு நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், பொது சுகாதார நடவடிக்கைகள் பல்வேறு எடுக்கப்பட்டு வரப்படுகிறது. இதில் முதிர் கொசுக்கள் அழிக்க புகைமருந்து தெளிப்பான் மூலம் புகைமருந்து தெளிக்கப்பட்டு வந்தது. தற்பொழுது நகராட்சி பகுதி முழுவதும் கொசுபுழுக்களால் பரவக்கூடிய டெங்கு நோய் வேகமாக பரவும் அபாயம் உள்ளதாலும், முதீர்கொசுக்களை ஆரம்ப நிலையிலேயே அழிக்கவும் மற்றும்

கட்டுப்படுத்தவும் சிறிய வகையிலான புகைபோக்கி இயந்திரங்கள் 1 லிட்டர் மற்றும் 2 லிட்டர் கொண்டவை 10 எண்ணிக்கையில் மற்றும் சிலிண்டர் 500 எண்ணிக்கை சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. **ந.க.எண்.2281/2019**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் (ம) முகவரி | புகைபோக்கி இயந்திரம் ஒன்றுக்கு ரூ. | சிலிண்டர் ஒன்றுக்கு விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | Prime Agencies<br>No.34/86, South Fort Street,<br>Vridhachalam, Pincode – 606001. | ரூ. 24,675/– | ரூ. 298/– |
| 2 | Mathaji Electricals<br>No.222/A, Eswaran Nagar,<br>Avadi Road, Redhills.<br>Pincode – 600052. | ரூ. 25,410/– | ரூ. 310/– |

**அலுவலக குறிப்பு:–**

அ) மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.901 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 16

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 22.89 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. மேலும் இந்நகராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள் முதல்நிலையிலேயே நேரடியாக பசுமை உரக்குடிலுக்கு எடுத்து செல்லப்பட்டு மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. மேலும் மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் 31.10.2019 முதல் முடிவடைவதால் ஒப்பந்தப்புள்ளி கோர காலஅவகாசம் இல்லாததாலும், மக்காத குப்பைகள் மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் சேகரித்து வைக்க போதிய இடவசதி இல்லாததாலும் குப்பைகள் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டியுள்ளதால் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டத்தின் அடிப்படையில் அரியலூர், அரக்கோணம், ரெடிஹில்ஸ் மற்றும் நாவலூர் ஆகிய பகுதிகளிலுள்ள தனியார் நிறுவனங்களுக்கு நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை ஏற்கனவே குப்பைகள் எடுத்து செல்லும் தனியார் நிறுவனத்திற்கு நவம்பர் மற்றும் டிசம்பர்– 2019, 2 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும் அதற்கான பணி உத்திரவு வழங்கவும் இதற்கென ஆகும் தோராய செலவினம் ரூ.22.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.902 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 17

2019 – 20ம் ஆண்டிற்கு திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் தேக்கமடைந்து பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பாக கையாள போரா பிளாஸ்டிக் கோணிப்பைகளில் அடைத்து பாதுகாப்பாக எடுத்துச்செல்ல கோணிப்பைகள் நாள் ஒன்றுக்கு 500 முதல் 750 தேவைப்படுவதாக இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரின் குறிப்பில்

தெரிவித்துள்ளார் பிளாஸ்டிக் போரா கோணிப்பைகள் **31.08.2019** முதல் **31.10.2019** உடன் முடிவடைவதால் ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாததாலும் பொது சுகாதார பணிகள் அவசியத்தினை கருதி இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும் பொது சுகாதாரம் பணியில் தொய்வு ஏற்படாமல் இருக்க போரா பிளாஸ்டிக் கோணிப்பைகள் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டத்தின் அடிப்படையில் போராபைகள் விநியோக செய்யும் நிறுவனத்திற்கு நவம்பர் மற்றும் டிசம்பர் **2** மாத காலத்திற்கு அதேவிலை விகிதப்படி சப்ளை செய்யவும் அதற்கான பணி உத்திரவு வழங்கவும் இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.**9.50** இலட்சத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.903 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 18</u>

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பணிகள் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு **28.50** சதுர கிலோ மீட்டர் பரப்பளவாகும். மாவட்ட ஆட்சி தலைவர் திருவள்ளூர் பொது சுகாதார இணை இயக்குநர், திருவள்ளூர் நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு ஆகியோரின் டெங்கு நோய் ஒழிப்பு ஆய்வு கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டபடி நகராட்சி பகுதி முழுவதும் டெங்கு நோய் பரவாமல் இருக்கவும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் எந்த நிலையிலும் பணியாளர்கள் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டதாலும் டெங்கு நோய் களப்பணியாளர்களுக்கு கொசு புழுக்கள் இருக்கும் இடத்தை கண்டறியவும், அவசர பணி மேற்கொள்ள தேவையான உபகரணங்கள் அப்புழுக்களை அழிப்பதற்கான தளவாட பொருட்கள் அடங்கிய (Kit Bag) கைப்பை சப்ளை செய்ய அரசு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கிகொள்ளவும் சமுதாய பொறுப்புணர்வு நிதியில் (CSR FUND) செலவீனம் மேற்கொள்ளவும் மன்றத்தின் தகவலுக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.904 நாள்.31.10.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**ஒம்/-தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

/உண்மை நகல்/

**ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**